**OS No.118/2018**
DW 3 – மாயழகு

நாள் 23.09.2025

**பி.வா.சா.3 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

வாதியை எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாதியை தெரியும் என்று சொல்லியிருந்தால் அது தவறு. 3 இலக்க சொத்திற்கு வழக்கு நடந்து வருகிறது. வழக்கு சொத்துக்கள் நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள வெள்ளைச்சாமிக்கு பூர்வீக பாத்திய சொத்து ஆகும்.

வெள்ளைச்சாமிக்கு பூர்வீக பாத்திய சொத்து என்பதற்கான பட்டாவை நான் பார்த்தது இல்லை. வெள்ளைச்சாமியின் தகப்பனார் வழி பூர்வீக பாத்தியமா தாயார் வழி பூர்வீக பாத்தியமா என்பது எனக்குத் தெரியாது. வெள்ளைச்சாமிக்கு முன்பு யார் பெயரில் வழக்கு சொத்திற்கு பட்டா இருந்தது என்பது எனக்குத் தெரியாது.

தாவா சொத்துக்களை 2,3 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் ஏதும் செய்யவில்லை. மேற்படி கிரய பத்திரம் எப்போது எழுதப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது. மேற்படி கிரயப் பத்திரத்தின் அடிப்படையில் 1 ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறியதா என்பதும் எனக்குத் தெரியாது.

2,3 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதிக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை கிரயம் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது.

1 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்துக்களை எப்போது கிரயம் கொடுத்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அந்த கிரயப்பத்திரத்திலும் நான் சாட்சி கையொப்பம் ஏதும் செய்யவில்லை. 1 ம்

பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்துக்களை எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் கொடுத்தார் என்பது எனக்குத் தெரியாது.

வழக்கு சொத்து ஆவணங்களை பொறுத்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. 2 ம் பிரதிவாதி என்னை சாட்சியம் அளிக்க சமூகம் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். அவர் தான் வழக்கு பற்றிய விபரங்களை எனக்கு சொன்னார். 2ம் பிரதிவாதி எனக்கு 20 வருட பழக்க நண்பர் ஆவார். 2 ம் பிரதிவாதி எனக்கு நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வழக்கு சொத்து, வழக்கு ஆவணங்கள், வழக்கு பற்றி தெரியாமால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**